# திரு. சுபராஜ் ராஜதுரை உடனான பேட்டி

**உபின் தீவின் கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம் குறித்த கண்ணோட்டங்களை ஃப்ரெண்ட்ஸ் ஆஃப் உபின் நெட்வொர்க்கின் (FUN) உறுப்பினரான இயற்கைப் பாதுகாப்பு ஆர்வலர் திரு சுபராஜ் ராஜதுரை அவர்களிடமிருந்து பெறுகிறோம். 35 ஆண்டுகளுக்கும் மேலான கள அனுபவத்தைக் கொண்டிருக்கும் திரு. சுபராஜ், ஸ்ட்ரிக்ஸ் வைல்டுலைஃப் கன்சல்டன்சியின் நிறுவனரும் ஆவார்.**

**உங்களுக்கு இயற்கைக் கல்வியில் ஆர்வம்/ உபின் தீவு மீதான விழிப்புணர்வு ஏற்பட எது தூண்டுகோலாக இருந்தது?**

நான் இளையராக இருந்த காலத்தில் இருந்தே இயற்கை மீதும் வனவிலங்குகள் மீதும் ஆர்வம் கொண்டிருந்தேன். அப்போது, சிங்கப்பூரில் வனவிலங்குகளுடன் பணிபுரியும் வாய்ப்புகள் விலங்கியல் பூங்காவில் அல்லது பறவைப் பூங்காவில் மட்டுமே கிடைத்தன, ஆனால் காடுகளில் வெளியில் வேலை செய்வதில் என் ஆர்வம் அதிகமாக இருந்தது. இறுதியில், சிங்கப்பூரின் வெவ்வேறு பகுதிகளில் வெளியில் நேரத்தை செலவிடுவதன் மூலம் எனது ஆர்வத்தை வளர்க்க முடிவு செய்தேன். தேசியச் சேவைக்குப் பிறகு, நான் வாரத்தில் ஐந்து நாட்கள் தன்னார்வமாக உபின் தீவு உட்பட பல பகுதிகளில் களத்தில் இருந்தேன்.

நான் 1982ஆம் ஆண்டில், ஒரு சில நண்பர்களுடன், உபின் தீவை ஆராய்ந்து, முகாமிட்டு, எனது தேடல் பயணங்களைத் தொடங்கினேன். சிறுகுழாய்-தலை கொண்ட புல்புல் பறவைகள் மற்றும் பல்வேறு பறவைகளின் சத்தத்தில் கண் விழிப்பது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அந்த நாட்களில் உபின் வித்தியாசமாக இருந்தது; குவாரிகள் மற்றும் உள்ளூர் கிராமங்களின் செயல்பாடுகளுடன் கிராமக் காட்சி துடிப்பானதாக இருந்தது. பறவைகளைப் பார்ப்பதற்கும் வனவிலங்குகளைக் கவனிப்பதற்கும் நான் குழுக்களை அழைத்து வந்தேன், என் ஆர்வத்தை நான் பகிர்ந்து கொள்ளும்போது அவர்களின் கண்களில் மகிழ்ச்சியைக் காண்பது மிகவும் மகிழ்ச்சியான விஷயங்களில் ஒன்றாகும். உபின் வேறுபட்ட கண்ணோட்டத்தை அளிக்கிறது, ஏனெனில் இது இயற்கையைப் பற்றி மட்டுமல்ல, மரபுடைமை மற்றும் கலாச்சாரத்தையும் பற்றியது. உபினுக்குப் பயணம் செய்வது பலரிடம் பிரபலமாக உள்ளது, குறிப்பாக பழைய தலைமுறையினருக்கு இது வீட்டிற்குத் திரும்புவதைப் போன்ற உணர்வை அளிக்கிறது. இளைய தலைமுறையினருக்கு, உபினுக்கு ஒரு பயணம் செய்வது ஒரு விழிப்பூட்டலாகும். படிப்படியாக, பார்வையாளர்கள் தீவில் தாங்கள் பார்வையிட்ட பகுதிகளுக்குத் தனிப்பட்ட தொடர்புகளை உருவாக்குகிறார்கள், மேலும் அந்த இடத்தை அப்படியே வைத்திருக்க நாங்கள் மக்களின் ஆதரவையும் பெறுகிறோம்.



## கடந்த சில ஆண்டுகளில் உபின் தீவு எவ்வாறு உருவெடுத்துள்ளது?

தீவின் வளர்ச்சி அழிக்கப்படுவதாக உபின் சமூகம் கவலை கொண்டிருந்தது. தீவின் பழமையான மற்றும் இயற்கை அழகைத் தக்க வைத்துக்கொள்ள, உபின் திட்டப்பணி குறித்த அறிவிப்பு வெளியானபோது அது ஒரு மகிழ்ச்சிதரும் ஆச்சரியமாக இருந்தது. பொதுவான தொலைநோக்குப் பார்வையுடன் அனைத்துச் சமூகங்களும் ஒன்றிணைந்து செயல்பட்டு, முன்பு இருந்ததை விட உபினை இன்னும் சிறப்பானதாக மாற்றுவதற்கான நம்பிக்கை துளிர்த்தது. 1982ஆம் ஆண்டு முதல் தீவில் இயற்கை பாதுகாப்பில் ஈடுபட்டு வருவதால் (அதாவது 37 ஆண்டுகள்!), நான் இளம் வயதிலிருந்தே அறிந்திருக்கும் சில கிராமவாசிகளுடன் நீண்டகாலத் தொடர்புகளை வளர்த்துள்ளேன். இங்கு வசிக்கும் மக்களை நாம் தொடர்ந்து ஈடுபடுத்த வேண்டும், மேலும் நம்மால் முடிந்த வழியில் அவர்களை ஈடுபடுத்த வேண்டும். சில இயற்கைப் பகுதிகள் காலப்போக்கில் அழிந்துவிட்டாலும், NParks, அரசுசாரா நிறுவனங்கள், இயற்கை ஆர்வக் குழுக்கள் மற்றும் கல்வியாளர்கள் போன்ற அனைத்து பங்குதாரர்களுடனும் நெருக்கமான பணி உறவைப் பேணுவதன் மூலம் நாம் இயற்கையை ஓரளவிற்கு மீட்டெடுத்துள்ளோம். இந்த நெருங்கிய உறவை வளர்க்க FUN உதவுகிறது, மேலும் இது உபினின் எதிர்காலத்திற்கு ஒரு மாற்றத்தை ஏற்படுத்துகிறது.

**அடுத்த தலைமுறை இயற்கை ஆர்வலர்கள் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்கள்?**

அடுத்த தலைமுறையினர் பழைய தலைமுறையினரை விட சிறந்த தகவல் ஆதாரங்களையும் சிறந்த இணைப்பையும் பெற்றிருக்கின்றனர். நான் முதன்முதலில் ஆரம்பித்தபோது, அதிகாரத்தில் உள்ளவர்களிடம் எங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க இயற்கைக் குழுக்கள் போராட வேண்டியிருந்தது. இன்று, அமைச்சர்களும் அதிகார வர்க்கத்தில் உள்ளவர்களும் உங்கள் கருத்தைப் பெற விரும்புகிறார்கள், அவர்கள் உரையாடலை விரும்புகிறார்கள். எனது தலைமுறையினரிடமிருந்து வந்த மரபு என்னவென்றால், ஒரு பின் சிந்தனையாக இருப்பதில் இருந்து, கொள்கைகளில் கருத்தில்கொள்ளப்பட வேண்டிய மற்றும் சேர்க்கப்பட வேண்டிய ஒரு காரணியாக இருப்பது வரை, பல்லுயிர் மற்றும் இயற்கைப் பாதுகாப்பிற்கான கனவை நனவாக்க நாங்கள் உதவினோம். அடுத்த தலைமுறை அதை முன்னோக்கி எடுத்துச் சென்று, அதை மேற்கொண்டு தொடர வேண்டும் என்பதே எனது நம்பிக்கை.

**அவர் நினைவாக**

திரு. சுபராஜ் அவர்கள் 22 அக்டோபர் 2019 அன்று மனநிம்மதியுடன் காலமானார். செப்டம்பர் மாதம் சாங்கி கிராமத்தில் திரு. சுபராஜ் அவர்களுடன் இந்த நேர்காணல் நடந்தது எங்கள் அதிர்ஷ்டமாகும். அவர் FUN-இன் முக்கிய உறுப்பினராக இருந்தார். மேலும், அவர் இயற்கை பாதுகாப்பிற்கான ஆர்வமுள்ள பாதுகாவலராகவும், இளையர் முதல் முதியோர் வரை அனைவருக்கும் உத்வேகம் அளிப்பவராக இருந்தார். உபின் திட்டப்பணிக்கு அவர் செய்த பல பங்களிப்புகள் பல முனைப்புகளில் பெரிதும் உதவியுள்ளன.

மிக்க நன்றி திரு. சுபராஜ்... உங்களைப் பிரிந்து வாடுகிறோம்.



# Ubin Tides

乌敏岛
Issue 4
November 2019 - March 2020
PULAU UBIN

## Balik Kampung 2019:
## Pesta Raya@Ubin

PestaRaya@Ubin இப்போது உபின் தீவின் வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க பகுதியாக உள்ளது! தேசியப் பூங்காக் கழகம் (NParks) மற்றும் ஃப்ரெண்ட்ஸ் ஆஃப் உபின் நெட்வொர்க் (FUN) ஆகியவற்றின் உதவியால் 350-க்கும் மேற்பட்ட குடியிருப்பாளர்களும் முன்னாள் குடியிருப்பாளர்களும் நோன்புப் பெருநாளை (ஹரி ராயா) 16 ஜூன் 2019 அன்று கொண்டாடுவதற்கு மீண்டும் இணைந்தனர். பல ஆண்டுகளாகத் தொடர்பை இழந்த நிலையில், பல நண்பர்களும் அக்கம்பக்கத்தார்களும் ஒருவரை ஒருவர் மீண்டும் சந்தித்து உரையாடுவதைக் காண்பது மனதிற்கு மிகவும் மகிழ்ச்சியளிப்பதாக இருந்தது. இலவச பயணியர் படகுகள் மற்றும் டாக்சிகள் என சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததால், முன்னாள் குடியிருப்பாளர்கள் இந்தக் கொண்டாட்டத்திற்காக மலாய் கிராமத்திற்கு வெகுதூரத்தில் இருந்தும் வந்திருந்தனர். சக்கர நாற்காலியைச் சாந்திருக்கும் நமது நண்பர்கள் இந்தக் கொண்டாட்டத்தில் கலந்துகொள்வதைச் சாத்தியமாக்கிய அக்சஸிபள் உபின் (Accessible Ubin) -க்குச் சிறப்பு நன்றிகள்!



உபினின் சந்ததியினரிடமிருந்து நோன்புப் பெருநாள் (ஹரி ராயா) வாழ்த்துக்கள்!

உபின் குடியிருப்பாளர்கள் தங்கள் வீடுகளைத் திறந்துவைத்து, அனைவரும் சுவைத்து மகிழ சுவையான உணவுகளை வழங்கினர். பாரம்பரிய விளையாட்டுக்கள், கேதுபட் நெசவு, புகைப்படச் சாவடி மற்றும் பாரம்பரிய மலாய் கலை நிகழ்ச்சிகள் என மொத்த மலாய் கிராமமும் பல உற்சாகமான மற்றும் அற்புதமான நடவடிக்கைகளைக் கண்டுகளித்தது. கொண்டாட்டங்களை மகிழ்ச்சியுடன் நிறைவுசெய்வதற்கு, மனதிற்கு இதமளிக்கும் வெள்ளை விளக்குகளின் வெளிச்சத்தில் பல வகை உணவுகள் நிறைந்த விருந்துக்காக அனைவரும் ஒன்றுகூடும் இடத்தில் கூடினர் - இது பலருக்கு மிகவும் நினைவுகூறத்தக்க அனுபவமாக அமைந்தது. அன்றிரவு பவுர்ணமி நிலவுக்குக் கீழ் உணவருந்த நாம் ஆசீர்வதிக்கப்பட்டோம்!



நமது டிக்கிர் பாராட் இசைக் கலைஞர்களின் இனிமையான பாடல்கள் குடியிருப்பாளர்களுக்குப் பெருவிருந்தாக அமைந்தது.



கம்போங் சுங்கை டூரியானின் முன்னாள் குடியிருப்பாளர்களை (மற்றும் அவர்களின் அன்புக்குரியவர்களை) இனிதே வரவேற்கிறோம்!

NATIONAL PARKS — LET'S MAKE SINGAPORE OUR GARDEN

FRIENDS OF UBIN NETWORK

**nparksbuzz**
Share your love for nature with us at
**#nparksbuzz**

# உபினின் தொல்பொருள் ஆய்வு சார்ந்த மரபுடைமையை வெளிக்கொண்டு வருதல்

## தொல்பொருளியல் ஆய்வு என்பது என்ன

**தொல்பொருளியல் என்பது நமது முன்னோடிகள் விட்டுச்சென்ற நமது கடந்த கால விஷயங்களிலிருந்து பொருள் கலாச்சாரத்தை அறிந்துகொள்வதற்கான ஆய்வு ஆகும். தொல்பொருள் ஆய்வாளர்கள் கலைப் பொருட்கள் மற்றும் நிலப்பரப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் போன்ற கடந்தகால மனிதச் செயல்பாடுகளின் சொல்வழி அடையாளங்களை ஆராய்கின்றனர்.**

நகரமயமாதலுக்கு முந்தைய உலகின் கடைசி எல்லைகளில் ஒன்றான உபின் தீவு, இன்றைய வளர்ச்சியடைந்த சிங்கப்பூரின் கடந்தகால வரலாற்றை ஆய்வு செய்வதற்கான ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்குகிறது.

டிசம்பர் 2017 முதல் பிப்ரவரி 2019 வரை, ISEAS-யூசோஃப் இஷாக் நிறுவனத்தின் குழு ஒன்று உபின் தீவில் மூன்று-பருவத் தொல்பொருள் ஆராய்ச்சியை நடத்தியது. தொல்பொருள் எச்சங்கள் மற்றும் தலங்களை அடையாளம் காண இக்குழு நாடு முழுவதும் ஆராய்ந்து, சில அற்புதமான கண்டுபிடிப்புகளை வெளிக்கொண்டு வந்தது!

## ஆய்வு 1:
### கிராமக் குடும்பங்கள் மற்றும் அவர்களின் நடைமுறைகள்

இக்குழு சிங்கப்பூரில் உள்ள வீட்டு உரிமையாளர்களுக்கும் சுற்றுப்புறத்திற்கும் இடையிலான தொடர்புகளை ஆராய விரும்பியது. எனவே இது கம்போங் மெலாயுவில் உள்ள எண் 846P என்ற இடத்தில் காலியாக இருந்த ஒற்றை மாடி மரக் குடியிருப்பை ஆய்வுக்காகத் தேர்வு செய்தது. இந்த ஆய்வில் வீட்டுவசதி மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதி பற்றிய விரிவான பதிவும், இல்லங்களின் கழிவு அகற்றல் மற்றும் உணவு எச்சங்கள் ஆகியவற்றின் வடிவ விதங்களும் அடங்கும். கண்டுபிடிக்கப்பட்ட சமையலறைக் கழிவுகள், குடியிருப்பாளர்களின் உணவு முறைகளைப் பற்றிய ஒரு கண்ணோட்டத்தை வழங்கியது.



*இக்குழு ஆய்வு செய்த தலங்களில், கம்போங் மெலாயுவில் உள்ள வீட்டு எண் 846P -உம் ஒன்றாகும்.*



*கடந்த காலங்களில் கிராமவாசிகளின் உணவுமுறையை ஆய்வு செய்வதற்கு, கடல் சிப்பிகள் போன்ற உணவு எச்சங்கள் ஆராய்ச்சியாளர்களுக்கு உதவுகின்றன.*



*காலியாக உள்ள வீட்டின் தோட்டத்தில் களப் பணியாளர்கள் வேலை செய்கின்றனர்*

## ஆய்வு 2:
### WWII கடலோர பீரங்கி ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள்

இரண்டாம் உலகப் போரின்போது, உபின் தீவு இராணுவ பாதுகாப்பில் முக்கிய பங்கு வகித்தது. சிங்கப்பூரைச் சுற்றியுள்ள கோட்டைகளின் ஒரு பகுதியாக, ஜோஹோர் நீரிணையைப் பார்த்தவாறு இருக்கும் உபின் தீவின் வடக்குக் கடற்கரையில் மோட்டார் எதிர்ப்பு நீர்மூழ்கி ஏவுகணைப் படகு (Anti-Motor Torpedo Boat - AMTB) பீரங்கித் தளம் கட்டப்பட்டது. தேசிய மாணவர் போலிஸ் படையின் முகாமுக்குள் அமைந்துள்ள இந்தத் தலத்தில், இரண்டு துப்பாக்கி நிலைகள், தீயணைப்பு கோபுரங்கள், வெடிமருந்துக் கடைகள், தேடல்விளக்குப் பதிவுகள் மற்றும் ஒரு மின்சார ஜெனரேட்டர் அறை ஆகியவை உள்ளடங்கியிருந்தன. இந்தக் குழு AMTB பீரங்கித் தளத்தின் எல்லைகளையும், அருகிலுள்ள கிராமமான கம்போங் பாரு உடனான அதன் உறவையும் ஆய்வு செய்தது.






*AMTB பீரங்கித் தளத்தில் நிறுவப்பட்டுள்ள மின்சாரத் தேடல் விளக்கு.*



*தொல்பொருளியல் குழு இரண்டாம் உலகப் போர் நடைபெற்ற காலத்தில் பயன்படுத்தப்பட்ட கழிவறையை ஆய்வு செய்தது.*

## ஆய்வு 3:
### 19ஆம் நூற்றாண்டு நகராட்சி கிரானைட் குவாரி

உபின் தீவு 'கிரானைட் தீவு' என்றும் அழைக்கப்படுகிறது, ஏனெனில் உபின் என்பது 'கடினமான கல்' அல்லது 'கிரானைட்' என்று பழைய மலாய் மொழியில் அர்த்தமாகும். அந்த நாட்களில், விவசாயம் மற்றும் மீன் வளர்ப்பு ஆகியவற்றுடன் கிரானைட்டை வெட்டியெடுத்தல் முக்கிய தொழில்களில் ஒன்றாக இருந்தது. கிரானைட்டை வெட்டியெடுக்கும் தொழில் 1840களில் இருந்தே நடைபெற்று வருகிறது. அக்காலகட்டத்தில் கிழக்கிந்திய நிறுவனம் அரசாங்கக் குவாரிகளை இயக்கத் தொடங்கியது. இந்த ஆரம்பக்கால நகராட்சிக் குவாரிகளின் அமைவிடங்கள் முற்றிலும் தெளிவாக இல்லை. அவற்றில் பெரும்பாலானவை 20ஆம் நூற்றாண்டின் ஆகப்பெரிய இயக்கங்களுக்கு உட்படுத்தப்பட்டிருக்கலாம். சுங்கை உபினின் கிழக்கே அமைந்துள்ள ஒரு முன்னாள் குவாரித் தலம் 19ஆம் நூற்றாண்டிலிருந்து எஞ்சியிருக்கலாம் - இந்தத் தலம் ஒரு சிறிய அளவிலான குவாரி ஆகும், இது 1940க்கு முன்னர் அல்லது 1900ஆம் ஆண்டின் முற்பகுதியில் கைவிடப்பட்டிருக்கலாம்.

மேலும் தகவல்களைக் கண்டறிய, இக்குழு கிரானைட் செயல்முறையின் பல்வேறு கட்டங்களை நிரூபிக்கும் ஆதாரங்களை ஆய்வு செய்வதற்கும் வரைபடம் உருவாக்குவதற்கும் அத்தலத்திற்குச் சென்றது.

## என்னென்ன வேலைகள் நடைபெறுகின்றன

இந்த ஆண்டின் முற்பகுதியில் களப்பணி முடிந்தாலும், குழு இன்னும் கண்டுபிடிப்புகளை ஆராய்ச்சி செய்வதிலும் விளக்குவதிலும் மும்முரமாக உள்ளது. களத்தில் இருந்து சேகரிக்கப்பட்ட கலைப் பொருட்களை ஆய்வு செய்வதற்கு, காப்பக ஆராய்ச்சி முதல் கடந்தகாலத் தலப் பயன்பாடு குறித்த வரலாற்றுப் பதிவுகள் மற்றும் ஆவணங்களில் இருந்து மேலும் தடயங்களைக் கண்டறிவது வரை பரந்த அளவிலான பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் உபின் தீவு தொல்பொருள் சார்ந்த எச்சங்கள் மற்றும் தலங்களின் புதையல் என்பதை நிரூபித்துள்ளன, மேலும் தீவின் பெரும்பகுதி ஆராயப்படாமல் உள்ளது.

***இந்த ஆய்வுக் கட்டுரையை ISEAS-யூசோஃப் இஷாக் நிறுவனத்தின் தொல்பொருள் ஆய்வாளர் லிம் சென் சியான் வழங்கியுள்ளார்.***